# KALANJIYAM

An International Journal of Tamil Stidies

**Vol: 02** **Issue:02** **Aug.2023**

# களஞ்சியம்

## சர்வதேச தமிழ் ஆய்விதழ்

eISSN: 2456-5148

https://ngmtamil.in/

ISSN 2456-5148

# பழமொழி நானூற்றில் அறம்

ப.மகேஸ்வரி
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
(அரசுஉதவி)
என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி.

## முன்னுரை

மனித வாழ்க்கையை நல்லமுறையில் வாழ அறக்கருத்துக்கள் மிகவும் தேவை. இந்த அறக்கருத்துக்கள் வயல் வரப்புபோல தீங்கிலிருந்து தடுத்து வாழ்க்கையை வளமாக்க முக்கியப் பங்கு வகிக்கின்றன. அறக்கருத்துக்கள் மனிதனின் வாழ்வைச் செப்பனிடும் ஒரு கருவியாக விளங்குகின்றன. ஒரு சமூகம் செம்மையானதாக விளங்க அறக்கருத்துக்கள் உள்ளும், புறமும் நின்று சீராக்கி சமூகத்தைச் சிறக்கச் செய்கின்றன. 'செத்தஎலி இறப்பிலே இருந்தாலும், கீழே இடுக்கிலே இருந்தாலும் வீடே நாறும்'. இதுபோல ஒழுக்கம் கெட்டவர்கள் உயர்மட்டத்தில் இருந்தாலும் அடிமட்டத்தில் இருந்தாலும் சமுதாயத்திற்குரிய மரியாதை கிடைக்காது. தமக்குத்தாமே ஏற்படுத்திற்கொண்ட ஒழுக்கக் கட்டுப்பாடுடன் வாழாத மனித சமுதாயம் என்றும் உயர்வு பெறாது. மனித வாழ்க்கை சிறக்க அறக்கருத்துக்கள் தேவை.

அவ்வகையில் தமிழினத்தின் செம்மையான நல்வாழ்விற்கு உதவும் அறிவொளி விளக்கங்களாகப் பழமொழிகள் விளங்குகின்றன. சுருங்கக் கூறின் விளக்க வைக்கும் தெளிவுரைகளாகவும் அவை விளங்குகின்றன. பழமொழிக்கு முதுமொழி என்ற பெயரும் உண்டு. முதுமொழியின் இலக்கணத்தைத் தொல்காப்பியனார் அக்காலத்திலேயே வரையறுத்துக் கூறியுள்ளார். ஒவ்வொரு பழமொழியையும் கூறி அதற்கு ஒரு நீதியை விளக்கும் செய்யுளாக மொத்தம் நானூறு செய்யுள்களால் அமைந்துள்ளது பழமொழி நானூறு. இப்படியாக ஒரு நூலை உருவாக்கி மக்களின் வாழ்வியல் மதிப்புகளைச் சீர்படுத்தவும்,

முறைப்படுத்தவும் பழமொழிகளைக் கொண்டு நிலைப்படுத்தவும் முயன்ற பெருமைக்குரியவர் முன்னுரை அரையனார். வாழ்வியல் அறங்களை பழமொழி வழியாக எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**ஈகையே செல்வத்திற்கு அழகு**

உள்ளம் மகிழ்ந்து தன்னிடம் இருப்பதைப் பிறருக்குக் கொடுப்பதே சிறந்த ஈகை. இதில் எதிர்பார்ப்பு என்பது இருத்தல் கூடாது. இவ்வாறு நாம் செய்யும் ஈகை நம்மை தொடர்ந்து வந்து இன்பம் அளிக்கும். ஒருவன் உள்ளத்தில்,

"நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று" (திருக்குறள் பா. 222, ப.46)

இரத்தல் நல்வழிதான் என்றாலும், கெட்டது ஈவார்க்கு அவ்வுலகில் இடமில்லை எனக் கூறினால் ஈதலே நல்லது என்பதை திருக்குறள் உணர்த்துகிறது.

**அன்பு செய்வதே அழகு**

அன்புகொண்ட மன்னனேச் சிறந்த மன்னன். ஆயிரம் காக்கைகளை ஓட்டுவதற்கு ஒரு சிறுகல்லே போதும். அதுபோல் ஆயிரம் பகைவர்கள் வந்தாலும் அன்புகொண்ட மன்னன் அப்பகைவர்களை அனைவரையும் தோற்றோடச்செய்து விடுவான். எனவே அன்பு கொண்டவர்களிடத்து பகை ஏற்பட வாய்ப்பில்லை. இதனை,

"மறுமனத்தின் அல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகி ஒழுகின் செறுமனத்தார்
பாயிரம் கூறிப் படைதொக்கால் என்செய்ய?
ஆயிரம் காக்கைக்கோர் கல்" (பழமொழி, ப.35)

என்ற பாடல் வரிகள் அன்பே பகைவர்களை விரட்ட சிறந்த வழி என்பதனைச் சுட்டுகிறது. இக்கருத்தினை திருக்குறள் பகைவர்களை விரட்ட அன்பே துணையாவது போல பாவங்ளையும் விரட்ட அன்பே துணையாகும் என்கிறது.

"அறத்திற்கே அன்பு சார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" (திருக்குறள், பா.76, ப.20)

என்ற குறளின் வழியாக அறியமுடிகிறது. மேலும் எலும்பில்லாத உயிரினங்களை வெயில் சுடுவதைப்போல அன்பில்லாதவர்களை அறமே துன்புறுத்தும். எனவே அன்பு கொண்டவர்களே சிறந்தவர்கள். இதனால் அன்பில்லாமல் இவ்வுலகில் வாழ்வதற்குப் பதிலாக வாழாமல் இறப்பதே சிறந்தது என்பதைனையும் அறிய முடிகிறது.

## முயற்சியே உயர்வு

மனித வாழ்வில் முயற்சி என்பது மாபெரும் உந்துசக்தி. இதனை உணர்ந்து ஒரு செயலைத் தளராது செய்துமுடிப்பவனே அறிவுடையவன் ஆகிறான். மேலும் முயற்சி உடையவன் நினைத்ததை முடிப்பான். அத்தகைய முயற்சி தேவை என்பதை வயதில் இளையவனாலும் அறிவினால் முதிர்ந்தவன் என்றே கொள்ளல் வேண்டும். இறுதிவரையும் முடித்துக்காணும் தளராத முயற்சி உடைமையே அறிவுடைமையாகும் என்பதனை,

"கற்றதொன்று இன்றி விடினும் கருமத்தை
ஆற்ற முடிப்பான் அறிவுடையான் - உற்றியம்பும்
நீத்தாநீர்ச்சேர்ப்ப! இளையோனே யாயினும்
மூத்தானே யாடு மகன்" (பழமொழி, பா. 61)

இறுதிவரை ஏற்றத்தை முடித்துக்காணும் தளராத முயற்சி உடைமையே அறிவுடைமையாகும் என்பதை வலியுறுத்துகிறது.

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" (திருக்குள் பா.619, ப.128)

தெய்வத்தால் ஆகாத போதும் தன் மெய்யை வருத்தி முயன்றால், அதற்கான பலன் மெய்யாகவே கிடைக்கும் என்கிறது. முயன்றால் முடியாதது எதுவும் இல்லை என்ற கருத்தை இக்குறள் வழியாக அறியமுடிகிறது. உயர்வான வாழ்விற்கு முயற்சியே சிறந்தவழி. அவ்வாழ்வினை மேற்கொண்டு செல்லும்போது மிகச் சிறப்பான வாழ்வினை வாழலாம் என்பதை அறிய முடிகிறது.

## இனிமையாக பேசுதல் அழகு

இனிமையான சொற்கள் ஒருபோதும் துன்பத்திற்கு கொண்டு விடுவிதில்லை. இனிமையாகவும் நன்மைதரும் சொற்களாலும் பேசுவதே சிறப்புடையது. இதனை,

"புன்சொல்இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்ப தில்" - (பழமொழி, ப.66).

ஏன்ற இப்பழமொழி மூலம் அறிய முடிகிறது.

இனிமையான சொற்களை மட்டும் சொல்லாமல் இருப்பது மிகவும் தவறாகும்.

1. உடுக்க உடையும், நோய்க்கு மருந்தும், தங்குவதற்கு இருப்பிடமும், உண்ண உணவும்,
2. இவற்றோடு இன்னபிறவும் பிறருக்கு கொடுத்து அவர் குறைகளைத்
3. தீர்த்தலான செயல்களைச் செய்து அவரை அனுப்பி வைத்து அவர்பால் இன்சொல் வழங்காதது தவறானதாகும்.அது எருமையைக் கொன்று விருந்து வைக்கத் தொடங்கும் ஒருவர் அதற்குரிய மசாலாப் பொருட்களுக்குக் கஞ்சத் தனம் செய்வது போன்றதாகும்.

"உடுக்கை மருந்து உறையுள் உண்டியோடு இன்ன
கொடுத்துக் குறைத்தீர்த்தல் ஆற்றி – விருந்தின்சொல்
ஈயாமை என்ப, எருமை எறிந்தொருவர்
காய்க்கு லோபிக்கும் ஆறு.
(பழமொழி, பா.98)

எல்லாக் கொடையிலும் இன்சொல் வழங்குதலே சிறப்புடையது என்பதை இப்பழமொழி மூலம் அறிய முடிகிறது.

## வாழ்விலே மனஉறுதி வேண்டும்

இல்லற வாழ்க்கையானாலும், துறவற வாழ்க்கையானாலும், தாம் உறுதியாக வாழ்வு மேற்கொள்ள வேண்டும். அப்படி உறுதியான வாழ்வை மேற்கொள்ளாதவர்கள் வாழ்நாள் வீணாகக் கழிந்து போகும். இருபக்கமும் சுமையைத் தொங்கவிட்டு எடுத்துச் செல்ல உதவுவது காவடித்தண்டு.

சுமைகளை அகற்றிவிட்டு வெறுந்தண்டைச் சுமந்துப் போவது நகைப்பிற்குரிய் செயலாகும். இச்செயல் போலத்தான் உறுதியில்லாதவர்கள வாழ்க்கை.

"இல்வாழ்க்கை யானும் இலதானும் மேற்கொள்வார்
நல்வாழ்க்கை போன நடுநின்று – எல்லாம்
ஒருதலையாச் சென்று துணையா தவரே
இருதலையும் காக்கழித் தார்" (பழமொழி, பா. 46)

என்ற பழமொழி மூலம் அறிய முடிகிறது. இக்கருத்தினை திருக்குறளானது,

"உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து" (திருக்குறள், பா.596, ப.124)

உயர்ந்ததையே என்றும் நினைக்க வேண்டும். அது நிறைவேறாமல் போனாலும் அந்நினைப்பைக் கைவிடுதல் கூடாது. வாழ்க்கையில் மனஉறுதி வேண்டும். அப்படி வாழாதவன் வாழ்வு பயனற்று போகும் என்ற கருத்தினை அறிய முடிகிறது. இதனை,

"பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்"

பருத்த உடம்மையும் கூரிய தந்தங்களையும் கொண்டிருக்கும் யானை, புலி தாக்க அஞ்சும். அதுபோல படைபலமுள்ள அரசன் ஊக்கமுடையவன் தாக்குதலுக்கு அஞ்சுவான். வாழ்விற்குத் தேவை ஊக்கம், மன உறுதி இவற்றைக் கொண்டவன் எந்நிலையிலும் தளரமாட்டான் என்ற கருத்தினைப் பழமொழியும் திருக்குறளும் காட்டிச் செல்கிறது. வாழ்விற்குத் தேவையான யாதார்த்தமான மாற்றங்களை அழகாக எடுத்துரைக்கிறது.

இக்கட்டுரையில் இடம்பெறும் பழமொழிகள் பின்வருமாறு.

- அறஞ்செய்ய அல்லவை நீங்கி விடும்
- ஆயிரம் காக்கைக்கோர் கல்
- இரு தலையும் காக்கழித்தார்

- இளையோனே யாயினும் மூத்தானே யாடு
- இன் சொல் இடர்ப்படுப்ப தில்
- காய்க்கு லோபிக்கும் ஆறு

## முடிவுரை

மனிதனின் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை எடுத்துரைப்பதில் தமிழிலக்கியம் சிறந்த பங்களிக்கின்றது. மனிதனுக்குரிய வாழ்வியல் நெறிமுறை அறத்தின் வழியாக நின்று வாழும வாழ்க்கை முழுமை பெறுகிறது. புழமொழி சிலவற்றை வைத்து நாம் வாழும் வாழ்க்கை நல்வழிப்படுத்த இக்கட்டுரை சிறந்த சான்று. இந்நிலையில் திருக்குறளும் சிறந்த சான்றாக அமைகின்றது.

## துணை நின்ற நூல்கள்


1. பழமொழி நானூறு - மூலமும் உரையும்
சாரதா பதிப்பகம்
ஜி.டி. சாந்தி அடுக்ககம்,
3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு,
ராயப்பேட்டை,சென்னை – 14.
முதற்பதிப்பு – ஏப்ரல் 2010.

2. திருக்குறள் உரை
செ. நல்லசாமி,
வாழ்க வளமுடன் ஆப்செட்,
பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்
அரச்சலூரி – 638 101.
முதற்பதிப்பு – 2019.